1990 சனவரி 22]

சமுத்திரம் ஏரியில் சாத்தனூர் அணையின் நீரைத் தேக்கி நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம்.

* 970—திரு. ஏ. ஜி. சம்பத் :—மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் திருவண்ணாமலை தாலூகா சமுத்திரம் ஏரியில் சாத்தனூர் அணையின் நீரைத் தேக்கி நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : (அ) மற்றும் (ஆ), மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலே இருக்கிற நீரை திருவண்ணாமலை பக்கத்திலே யிருக்கிற சமுத்திர ஏரிக்கு கொண்டு வந்து அதை நந்தன் கால்வாயோடு இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை பொது மக்களிடமிருந்து அரசுக்கு வந்திருக்கிறது. எனவே அந்தத் திட்டம் அரசின் கருத்தில் இருக்கிறது. இன்னும் எந்த செயல் வடிவமும் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் படுகிறது.

கொள்ளிடத்தில் இருந்து கிடைக்கும் ஊற்று நீர், உபரி நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

* 3311—டாக்டர் மா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சீர்காழியில் வடரங்கத்தில் இருக்கும் கொள்ளிடத்தில் இருந்து கிடைக்கும் ஊற்று நீர், உபரி நீரை மீண்டும் இறைத்து பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.